வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 25.6.2024 - செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

அவசர நிலையை எதிர்த்துப் போராடிய அனைவருக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்தி உள்ளார்.

18ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத்தொடரில் 2ஆம் நாளான இன்றும், புதிய எம்.பிக்கள் பதவி ஏற்றுக் கொண்டனர்.

மூத்த பிஜேபி தலைவர் திரு. ஓம் பிர்லா மக்களவைத் தலைவர் பதவிக்கான பிஜேபி வேட்பாளராக இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

கள்ளக்குறிச்சி விஷச் சாராய சம்பவம் குறித்து, தேசிய மனித உரிமைகள் ஆணையம், தமிழக அரசின் தலைமைச் செயலருக்கும், காவல்துறை தலைவருக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

***மோடி அவசரநிலை (10)***

அவசர நிலையை எதிர்த்துப் போராடிய அனைவருக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்தி உள்ளார். 1975ஆம் ஆண்டு இதே நாளில்தான் அவசர நிலை அறிவிக்கப்பட்டதை குறிக்கும் வகையில், இன்று சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஜனநாயகத்தின் மீதான இந்த தாக்குதலை எதிர்த்து போராடிய பல்வேறு மக்களுடன் சேர்ந்து எண்ணற்ற அனுபவங்களை தாம் பெற்றதாகத் தெரிவித்து, இது பற்றிய காட்சிகளை இணைப்பாக வழங்கி உள்ளார். அடிப்படை சுதந்திரத்தை காங்கிரஸ் எப்படி சீர்குலைத்தது என்பதையும், அரசியல் சாசனத்தை எவ்வாறு காலில் போட்டு மிதித்து என்பதையும், அவசர நிலையின் கருப்பு நாட்கள் நமக்கு நினைவூட்டுவதாக பிரதமர் கூறியுள்ளார்.

***நாடாளுமன்றம் (10)***

18ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத்தொடரில் 2ஆம் நாளான இன்றும், புதிய எம்.பிக்கள் பதவி ஏற்றுக் கொண்டனர். நேற்றைய தினம் 266 எம்.பிக்கள் பதவி ஏற்ற நிலையில், எஞ்சிய எம்.பிக்களுக்கு இன்று பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. இன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட புதிய எம்.பிக்களில், திமுகவைச் சேர்ந்த திரு. தயாநிதி மாறன், திரு. டி.ஆர். பாலு, திருமதி. கனிமொழி உள்ளிட்டவர்களும் அடங்குவர். இன்று புதிய உறுப்பினர்களின் பதவியேற்பும், நாளை மக்களவைத் தலைவர் பதவிக்கான தேர்தலும் முடிந்த பின்னர், நாளை மறுநாள் இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு உரையாற்ற இருக்கிறார்.

***ஓம் பிர்லா (17)***

மூத்த பிஜேபி தலைவர் திரு. ஓம் பிர்லா மக்களவைத் தலைவர் பதவிக்கான பிஜேபி வேட்பாளராக இன்று வேட்புமனு தாக்கல் செய்தார். இராஜஸ்தான் மாநிலம் Kota – Bundi தொகுதியில் இருந்து 3 முறை மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவரான திரு. ஓம் பிர்லா, ஏற்கனவே, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் 2ஆவது பதவிக் காலத்தில், மக்களவைத் தலைவராக பதவி வகித்துள்ளார். இம்முறையும் மக்களவைத் தலைவர் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டால், தொடர்ந்து 2ஆவது முறையாக இப்பதவிக்கு வரும் முதலாவது மூத்த பிஜேபி தலைவராகத் திகழ்வார் என்பதும் குறிப்பிடத் தக்கது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல்ராம் ஜாக்கர் கடந்த 1980 மற்றும் 1985ஆம் ஆண்டுகளில், மக்களவைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இரு முறையும், 5 ஆண்டுப் பதவிக்காலத்தை பூர்த்தி செய்தார். ஜிஎம்சி பாலயோகி, பிஏ சங்மா ஆகியோர் மக்களவைத் தலைவர் பதவிக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், பதவிக் காலத்தை முழுமையாக பூர்த்தி செய்ய இயலவில்லை. இதற்கிடையே, மக்களவைத் தலைவர் பதவிக்கான இண்டியா கூட்டணி வேட்பாளராக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. சுரேஷ் வேட்புமனு தாக்கல் செய்தார்.

***சபாநாயகர் சேர்க்கை (18)***

முன்னதாக, சபாநாயகர் பதவி குறித்து பொதுக் கருத்து ஒன்றை எட்டும் முயற்சியாக மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா, திரு. ஜே.பி. நட்டா ஆகியோர், மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. கே.சி. வேணுகோபால், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு ஆகியோருடன் கூட்டம் நடத்திய போதிலும், பொதுக்கருத்து எட்டப்படவில்லை. சபாநாயகர் பதவிக்கு திரு. ஓம் பிர்லாவின் பெயரை தாங்கள் ஏற்கும் முன்பாக, துணை சபாநாயகர் பதவிக்கான வேட்பாளரின் பெயரை அறிவிக்க வேண்டுமென எதிர்கட்சிகள் கூறியதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல், பின்னர் நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் தெரிவித்தார். துணை சபாநாயகர் பதவிக்கான வேட்பாளர் யார் என்ற பிரச்சனை அதற்குரிய நேரத்தில் பரிசீலிக்கப் படும் என்றும், சபாநாயகர் பதவி குறித்த எதிர் கட்சிகளின் நிபந்தனைகளை அரசு நிராகரிப்பதாகவும் அவர் கூறினார். முன்னதாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராகுல் காந்தி நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில், துணை சபாநாயகர் பதவியை எதிர் கட்சிகளுக்கு வழங்குவதே மரபு என்றும், அவ்வாறு வழங்கினால் சபாநாயகர் பதவிக்கான ஆளும் கூட்டணி வேட்பாளரை ஆதரிக்க எதிர் கட்சிகள் தயார் என்றும் கூறினார்.

***சபாநாயகர் – கருத்து (17)***

சபாநாயகர் பதவி பற்றிய எதிர்கட்சிகளின் அணுகுமுறை சரியானது அல்ல என்று, ராம்விலாஸ் – லோக் ஜனசக்தி கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான, திரு. சீராக் பாஸ்வான் கூறியுள்ளார். இன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர், விடுதலைக்கு பின்னர் சபாநாயகர் பதவிக்கு தேர்தல் நடந்ததாக தமக்கு நினைவில்லை என்றும், இம்முறை தேர்தலில் திரு. ஓம் பிர்லாதான் வெற்றி பெறுவார் என்றும் கூறினார். மத்திய அமைச்சரும், தெலுங்கு தேசம் கட்சியின் மூத்த தலைவருமான திரு. ராம்மோகன் நாயுடு செய்தியாளர்களிடம் பேசுகையில், அரசே எதிர்கட்சிகளை தேடிச் சென்று பேசிய நிலையிலும், எதிர்கட்சிகள், நிபந்தனை விதிப்பது நல்லதல்ல என்றும், ஜனநாயகம் நிபந்தனைகள் மீது நடக்காது என்றும் கூறினார்.

இதற்கிடையே, சபாநாயகர் பதவிக்கான எதிர் கட்சிகளின் வேட்பாளர் திரு. கே. சுரேஷ், செய்தியாளர்களிடம் பேசுகையில்,

காங்கிரஸ் அங்கீகரிக்கப்பட்ட எதிர்கட்சி அல்ல என்று கூறித்தான், கடந்த 2 முறையாக, துணை சபாநாயகர் பதவி, எதிர்கட்சிகளுக்கு மறுக்கப் பட்டதாகவும், தற்போது, அங்கீகரிக்கப்பட்ட எதிர்கட்சியாக காங்கிரஸ் இருப்பதால், துணை சபாநாயகர் பதவியைப் பெறுவது, எதிர்கட்சிகளின் உரிமை என்றும் கூறினார்.

***எமர்ஜென்சி -1 (15)***

ஜனநாயகத்தின் தாயாக கருதப்படும் இந்தியாவில், ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்க காங்கிரஸ் முயன்றதே அவசரநிலை பிரகடனம் என்று மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார். எமர்ஜென்சி குறித்து, **ஜனநாயகத்தின் கருப்பு தினங்கள்** என்ற தலைப்பில், புதுடெல்லியில் உள்ள பிஜேபி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், காங்கிரஸ் கட்சியின் சிந்தனை, செயல் இரண்டிலும், ஜனநாயகத்திற்கு இடமில்லை என்றார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை, காங்கிரஸ் 90 முறை கவிழ்த்து இருப்பதாகவும், இன்று ஜனநாயகம் பற்றிப் பேசும் காங்கிரஸ் தலைவர்கள், உண்மையில் ஜனநாயகத்தை ஒடுக்கியதற்காக தேசத்திடம் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் திரு. ஜே.பி. நட்டா கூறினார். சபாநாயகர் பதவி குறித்து அவர் பேசுகையில், இண்டியா கூட்டணி கட்சிகள் ஆளும் கர்நாடாக, தெலங்கானா மற்றும் தமிழ்நாட்டில், சட்டப்பேரவைத் தலைவர் பதவி – துணைத் தலைவர் பதவி ஆகிய இரண்டையும் ஆளும் கட்சிதான் வகிப்பதாகக் கூறினார்.

***கள்ளச்சாராயம் (16)***

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், விஷச் சாராய சம்பவத்தில் பல உயிர்கள் பலியானது பற்றிய ஊடகச் செய்திகள் மீது, தேசிய மனித உரிமைகள் ஆணையம் தானாகவே முன்வந்து, நடவடிக்கை எடுத்து, தமிழக அரசின் தலைமைச் செயலருக்கும், காவல்துறை தலைவருக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இவர்கள் சம்பவம் குறித்து ஒரு வார காலத்திற்குள் விரிவாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என நோட்டீஸில் அறிவுறுத்தப் பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையின் நடப்பு நிலை, பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணம், தவறு செய்த அதிகாரிகள் மீதான நடவடிக்கை உள்ளிட்ட எல்லா

விவரங்களும் அறிக்கையில் இடம் பெற வேண்டும் என தாங்கள் எதிர் பார்ப்பதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

மதுபானங்களின் உற்பத்தி, கையிருப்பு, அனுப்புகை, மற்றும் விற்பனையை முறைப்படுத்த மாநிலங்களுக்கு பிரத்யேக அதிகாரம் இருப்பதாகவும், கள்ளச் சாராய சம்பவம் பற்றிய ஊடகச் செய்திகள் உண்மையானால், பாதிக்கப் பட்டவர்களின் வாழ்வுரிமை மீறப்பட்டதாக தீவிரப் பிரச்சனை எழும் என்றும், மனித உரிமைகள் ஆணையம் கூறியுள்ளது.

***சாராயம் அஇஅதிமுக -1 (16)***

கள்ளக்குறிச்சி விஷச்சாராயம் சம்பவம் குறித்து தமிழக சட்டமன்ற எதிர்கட்சியான அஇஅதிமுக, மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவியிடம் புகார் மனு கொடுத்துள்ளது. அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று அவையில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட பின்னர், கருப்புச் சட்டை அணிந்த வண்ணம், ஆளுநர் மாளிகை சென்று ஆளுநரிடம் மனு கொடுத்தனர்.

முன்னதாக, இன்று காலை சட்டமன்றத்தின் அலுவல்கள் தொடங்கிய போது, கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து, கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து அவையில் விவாதிக்க வேண்டும் என அஇஅதிமுக உறுப்பினர்கள் கோரினர். கேள்வி நேரத்தில் விவாதிக்கலாம் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு கூறிய நிலையிலும், அஇஅதிமுக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்ட வண்ணம் இருந்ததால், ஒரு வார காலத்திற்கு அவர்களை இடை நீக்கம் செய்து பேரவைத் தலைவர் உத்தரவிட்டார்.

எதிர்கட்சிகளின் குரல் அவையில் பதிவாக வேண்டும் என்பதால், சஸ்பெண்ட் உத்தரவை ஒருநாளாக குறைக்கலாம் என்று, பின்னர் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் விடுத்த வேண்டுகோளை பேரவைத் தலைவர் ஏற்றுக் கொண்டார்.

***சாராயம் அஇஅதிமுக -2 (6)***

கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து, விசாரிக்க ஒரு நபர் கமிஷன் அமைக்கப் பட்டுள்ளதாகவும், இதுவரை 20 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தமது உரையில் கூறினார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பிரச்சனையில்

அரசியல் ஆதாயம் தேட எதிர்கட்சிகள் முயல்வதாக திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.

***பிரல்ஹாத் ஜோஷி – 1 (17)***

**சர்க்கரையும் – உயிரி எரிபொருளும்** என்ற தலைப்பில், சர்வதேச சர்க்கரை அமைப்பின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ISO கவுன்சில் கூட்டத்தை, மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

தூய எரிபொருள் தயாரிக்கும் திறனும் கரும்புக்கு இருப்பதால், கரும்பின் மதிப்பு, புதிய உயரங்களை எட்டி இருப்பதாக அவர் கூறினார். பலதரப்பட்ட பயன்பாடுகளுக்கு உகந்த கரும்பை, குறைந்த அளவு நீரை பயன்படுத்தி, நீடித்த அடிப்படையில் சாகுபடி செய்ய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும், இதில் சர்வதேச ஒத்துழைப்பு தேவை என்றும் அவர் வலியுறுத்தினார்.

கரும்பின் வெவ்வேறு பயன்பாடுகளுக்கு இடையில், சமநிலை இருக்க வேண்டும் என்றும், இது தொடர்பான திட்டங்களை தயாரிப்பதில், விவசாயிகள், நுகர்வோர், தொழில்துறையினர் ஆகிய அனைத்துத் தரப்பினரின் நலன்களை கருத்தில் கொள்ளுதல் அவசியம் என்றும் அவர் கூறினார். சர்வதேச சர்க்கரை அமைப்பின் ISO கவுன்சில் கூட்டம் 12 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் தற்போது இந்தியாவில் நடைபெறுவதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

***பிரல்ஹாத் ஜோஷி – 2 (4)***

விவசாயிகள், நுகர்வோர் உட்பட அனைத்துத் தரப்பினரின் நலன்களை பாதுகாக்க புதுமையான உத்தேசங்கள் இக்கூட்டத்தில் வெளியாகும் என்றும் அவர் கூறினார். இந்த 3 நாள் கூட்டத்தில், 30 நாடுகள் மற்றும் பல்வேறு சர்வதேச அமைப்புகளில் இருந்து பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

***போதைப்பொருள் தினம் (8)***

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம் நாளை கடைபிடிக்கப் படுகிறது. போதைப்பொருள் பழக்கத்தினால், தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகத்திற்கு ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் நாளைய தினம் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. போதைப் பழக்கத்தையும், போதைப் பொருள் கடத்தலையும் தடுப்பதில், அரசுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கு, தனிநபர்கள் மற்றும் சமூகத்தினர் ஆதரவளித்தல் அவசியம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

***கெஜ்ரிவால் (6)***

டெல்லி அரசின் மதுபானக் கொள்ளை தொடர்பான வழக்கில் டெல்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் அனுமதி வழங்கி, விசாரணை நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவை இன்று டெல்லி உயர்நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது. ஜாமீன் அனுமதிக்கு எதிரான வாதங்களை விசாரணை நீதிமன்றம் கேட்கவில்லை என அமலாக்கத் துறையினர் வெளியிட்ட குற்றச்சாட்டை, உயர்நீதிமன்றத்தின் கோடைக்கால பெஞ்ச் ஒப்புக் கொண்டது.

***சுநேத்ரா (5)***

குடியரசுத் துணைத் தலைவரும், மாநிலங்களவை தலைவருமான திரு. ஜக்தீப் தன்கர், இன்று நாடாளுமன்றத்தில், மாநிலங்களவையின் புதிய உறுப்பினர் திருமதி. சுநேத்ரா பவாருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மாநிலங்களவையின் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

அவசர நிலையை எதிர்த்துப் போராடிய அனைவருக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்தி உள்ளார்.

18ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத்தொடரில் 2ஆம் நாளான இன்றும், புதிய எம்.பிக்கள் பதவி ஏற்றுக் கொண்டனர்.

மூத்த பிஜேபி தலைவர் திரு. ஓம் பிர்லா மக்களவைத் தலைவர் பதவிக்கான பிஜேபி வேட்பாளராக இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

கள்ளக்குறிச்சி விஷச் சாராய சம்பவம் குறித்து, தேசிய மனித உரிமைகள் ஆணையம், தமிழக அரசின் தலைமைச் செயலருக்கும், காவல்துறை தலைவருக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / MS / RK**